**சார்பு நீதிமன்றம், சீர்காழி.**

**அசல் வழக்கு எண். 395/2023**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25-ம் நாள் புதன் கிழமை PW1 இன் வாக்குமூலம், 1873 ஆம் ஆண்டு இந்தியசாட்சிய சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி திருமதி. S.மும்தாஜ், B.Sc.,B.L., சார்பு நீதிபதி, சீர்காழி அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு, பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 25.02.2026 | தந்தை/கணவர் பெயர்: | |
| பெயர்: | அருண்குமார் (PW1) | தாலுக்கா: | |
| கிராமம்: | | வயது : | |

**சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டு முதல் விசாரணை**

நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். எனக்கு வழக்கு விபரம் தெரியும். முதன்மை சாட்சியத்தை நிரூபணபிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். நிரூபணபிரமாண வாக்கு மூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

1) 16.10.2020- பதிவு பெற்ற அடமான பத்திரம் அசல் வா.சா.ஆ. 1 ஆகவும்

2) 01.09.2022 வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.2 ஆகவும்

3) அஞ்சலக ஒப்புகை அட்டை வா.சா.ஆ.3 ஆகவும்

குறியீடுசெய்யப்படுகிறது. தாவாபடி தீர்வாக வேண்டுகிறேன்.